2018 மே 30]

82—

புதிய மின்மாற்றி

***9326—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், கருவனூரில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கேள்வி கேட்பதற்கு முன்பாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியைப் பொறுத்தவரையில், 100 KVA திறன்கொண்ட ஒரு transformer அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் தற்போது இங்கு இல்லை என்றாலும், இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக்கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் இல்லையென்றாலும், துணைக் கேள்வி கேட்க விரும்புகின்ற உறுப்பினர்கள் கையை உயர்த்தினால், அவர்களுக்கு வாய்ப்பு தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாயார் கிராமச்சாலை, கடந்த 19 ஆண்டுகளாக தார்ச் சாலை போடப்படாமல் குண்டும் குழியுமாக உள்ளது. அப்பகுதி கிராம மக்கள் (குறுக்கீடு) மின்சாரத் துறை சம்பந்தப்பட்ட கேள்வியா? சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவைக்குள் நுழையும்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், விருப்பம் உள்ளவர்கள் துணைக் கேள்வி கேட்கலாம் என்று சொன்னதால், இந்த வினாவினைக் கேட்டேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், இந்த மூலக்கேள்விக்கு சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கள்; மூலக்கேள்விக்குத் தொடர்புடையதை கேளுங்கள்.*

முற்பகல் 10-05

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பகுதியில், 230 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கடந்த ஆண்டே சட்டப் பேரவையிலே கேள்வி எழுப்பியிருக்கிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் அளித்துள்ளார். அதற்குப் போதிய இடம் விருத்தாசலம் நகரத்திலே இருக்கிறது. ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தமே இருக்கிறது. மேலும், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் என்னுடைய தொகுதியின், ஒரு பகுதியில் அமைந்திருக்கிறது. எனவே, நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை நேரடியாகவே பெறக்கூடிய வாய்ப்பு விருத்தாசலம் பகுதிவாழ் மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, 230 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டே 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விருத்தாசலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

2018 மே 30]

தகுந்த இடம் கண்டறியப்பட்டால், உடனடியாக அந்த இடத்தை ஆய்வு செய்து, தேவை இருப்பின், மின்சார வாரியம் அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து, உடனடியாக 230 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு கேள்விக்குத்தான் வாய்ப்பு அளிக்கப்படும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் பணிவோடு வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், தளமலை பகுதியிலும், சத்தியமங்கலம் வட்டம், கடம்பூர் மலைப் பகுதியிலும் புதிய துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி பகுதியிலும், கடம்பூர் பகுதியிலும் மின்னழுத்தம் குறைவாகத்தான் இருக்கின்றது. மின்னழுத்தம் அதிகமாகத் தேவைப்படுகின்றபோது, உடனடியாகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*